**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2015–2016 ஆம் நிதியாண்டு – கல்வி பயிலும் மாணவ/மாணவியர், பணிபுரிவோர், சுயதொழில்புரியும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான காதுக்கு பின்னால் அணியும் காதொலி கருவிகள் (Behind the Ear Hearing Aids) (BTE) வாங்கி வழங்கும் திட்டம்– திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.27 நாள்: 04–09–2015
மன்மத, ஆவணி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.48, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–08–2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2112/இவாததி–1/2015, நாள் 15.7.2015.

–––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015 ஆம் நிதியாண்டில், கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்கள் பணிபுரிவோர், சுயதொழில்புரிவோர் மற்றும் வயதான செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் (Behind the Ear Hearing Aids) வாங்கி வழங்கிட ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், காதொலிக் கருவி தேவைப்படுவோரின் எண்ணிக்கை அதிகமாகி வருவதால், 2015–16 ஆம் நிதியாண்டிலும், இதனை தொடர் திட்டமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்றும், எனவே இத்திட்டத்தினை 2015–2016 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்த திட்டத் தொடராணையும், இந்நிதியாண்டில் 2000 பயனாளிகளுக்கு காதொலி கருவி ஒன்றின் விலை ரூ.5000/– வீதத்தில் ரூ.1.00 கோடி செலவினத்தில் வாங்கி வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பின்வருமாறு ஆணையிடுகிறது:-

i. கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்கள் பணிபுரிவோர் மற்றும் சுயதொழில்புரியும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு காதுக்குப்

பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் வாங்கி வழங்கும் திட்டத்தினை, 2015–16 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும், மற்றும் காதொலிக் கருவி ஒன்றின் விலை ரூ.5000/– என்ற வீதத்தில், 2000 பயனாளிகளுக்கு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதி 2000ன்படி, திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்கிட, ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

ii. பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் செவித்திறன் பாதிப்பு கடுமையாக அல்லது முழுமையாக உள்ளதா என்பதை உறுதி செய்து, காதொலிக் கருவிகளை முதல் கட்டமாக அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் செவித் திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கும், இதர பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ /மாணவிகளுக்கும் விலையில்லாமல் வழங்க வேண்டும்.

iii. காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ள தோராய விலையான ரூ.5000/–க்குள் மட்டுமே முறைப்படி கொள்முதல் செய்ய வேண்டும்.

iv. காதொலி கருவியின் விலை ஏற்ற, இறக்கத்தினை பொறுத்து காதொலி கருவிகளை கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ வாங்கி வழங்கிடவும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“2235–சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 101. மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டம் சாராது–CO– மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு திட்டம் பொருட்களும் வாங்குதலும்”.

(த.தொ.கு 2235–02–101–CO–1917)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.49202/நிதி(சந)/2015, நாள் 01.09.2015–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.

**நகல்:**
நிதித்துறை (சமூக நலம்) சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.